# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

## ஒபாமாவின் வருகை
## இந்தியர்களாகிய நமக்கு பெருமையான விஷயமே அல்ல…….

அன்பார்ந்த தோழர்களே,

இந்த ஆண்டு குடியரசு தின விழாவிற்கு செய்தி பத்திரிக்கைகளும், தொலைகாட்சிகளும், அதி முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இந்திய குடியரசு தின விழா கொண்டாட்டத்தில் சிறப்பு விருந்தினராக அமெரிக்க அதிபர் வரலாற்றில் முதன் முறையாக கலந்து கொண்டதே அதற்கு காரணம். அது மட்டுமல்லாமல் பராக் ஒபாமாதான் இந்திய நாட்டிற்கு இரண்டாம் முறையாக வந்த அமெரிக்க அதிபர் என்பதும் மற்றொரு காரணம். இந்திய நாடு சுயாதிபத்தியம் பெற்ற குடியரசாக மலர்ந்ததை தான் குடியரசு தினத்தில் நாம் கொண்டாடுகிறோம். ஆனால் பல நாடுகளின் சுயாதிபத்தியத்தை வெறித்தனமாக மீறும் செயல்களை செய்யும் ஒரு நாட்டின் அதிபரைத்தான் இந்த ஆண்டு குடியரசு தினத்தின் சிறப்பு விருந்தினராக நாம் அழைத்துள்ளோம் என்பது தான் வேதனையான விஷயம்.

அமெரிக்காவின் மீதோ அல்லது அதன் அதிபரின் மீதோ நமக்கு எந்த ஒரு காழ்ப்புணர்ச்சியும் கிடையாது. தனிப்பட்ட முறையில் ஒபாமாவின் மீதும் நமக்கு வெறுப்பு கிடையாது. உண்மையில், ஆஃப்ரிக்கா அமெரிக்கர்களை பாரபட்சமாக நடத்தும் ஒரு நாடான அமெரிக்காவின் அதிபராக பராக் ஒபாமா வந்த மகிழ்ச்சியில் நாமும் பங்கேற்றோம். ஆனால் அவரது அரசாங்கம் எந்த விதமான கொள்கைகளை கடைபிடிக்கிறது என்பது தான் பிரச்சனை.

அமெரிக்க அரசாங்கம், தனது பன்னாட்டு கம்பெனிகள் இதர ஏழை நாடுகளின் செல்வாதாரங்களை கொள்ளையடிக்க வகை செய்யும் கொள்கைகளைதான் அமுலாக்குகிறது. இதனை அடைவதற்கு தேவைப்பட்டால் ராணுவ பலத்தை பயன்படுத்த தயங்குவதில்லை. பிற நாட்டின் சுயாதிபத்தியத்தை மீறுவதில் அமெரிக்காவிற்கு மிகப்பெரிய சரித்திரம் உள்ளது. 1950 முதல் 1953 வரை கொரிய நாட்டின் மீது ராணுவ தலையீட்டை செய்தது. அதே போல 1955 முதல் 1975 வரை வியட்னாம் நாட்டிற்கு மிகப்பெரிய அளவில் ராணுவத்தை அனுப்பி யுத்தம் நடத்தியது. இந்த யுத்தங்கள் அனைத்தும் கொரிய மற்றும் வியட்னாம் ஆகிய நாடுகளின் சுயாதிபத்தியத்திற்கு எதிராக நடத்தப்பட்டவைகள். இது போல பிற நாடுகளின் சுயாதிபத்தியத்திற்கு எதிராக அமெரிக்கா நடத்திய தாக்குதல்கள் பலவற்றை நம்மால் கூற முடியும்.

சமீபத்தில் மேலும் பல நாடுகளின் சுயாதிபத்தியத்தை அமெரிக்கா மீறி உள்ளது. சதாம் உசேனை அதிகாரத்தில் இருந்து அகற்றுவதற்காக ஈராக்கில் அப்பட்டமாக நுழைந்தது. அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் லிபியாவில் அப்பட்டமாக நுழைந்து கடாபியினை அதிகாரத்தில் இருந்து அகற்றியது. சிரியாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசாத் அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டும் என்ற ஒரே

நோக்கத்துடன், அங்குள்ள பல்வேறு தீவிரவாத அமைப்புகளுக்கு ஆயுதங்களை வினியோகித்தது. கடந்த 14 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது. அமெரிக்காவின் தங்கு தடையற்ற ஆதரவின் காரணமாகவே, இஸ்ரேல் பாலஸ்தீனியர்களை ஒடுக்குவதோடு, அவர்களின் பகுதிகளை எல்லாம் ஆக்கிரமிப்பு செய்கிறது.

மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்கா நடத்திய தாக்குதல்களால் பல கடுமையான விளைவுகள் ஏற்பட்டுள்ளன. அல் கொய்தா, ISIS போன்ற பல தீவிரவாத அமைப்புகள் தலைதூக்கி இன்று மனித குலத்திற்கு மிகப்பெரிய அச்சுறுதல்களாக மாறியுள்ளன. ஆப்கானிஸ்தானோ, ஈராக்கோ அல்லது லிபியாவோ, எந்தெந்த நாடுகளில் அமெரிக்க படைகள் நுழைந்தனவோ அங்கெல்லாம் மிகப்பெரிய குழப்பம் ஏற்பட்டுள்ளது. அந்த நாடுகள் எல்லாம் சிதறுண்டு போகும் நிலை உருவாகி உள்ளது. இவ்வாறு அமெரிக்கா இன்று உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக விளங்குகிறது.

பிற நாடுகளின் விடுதலை மற்றும் சுயாதிபத்தியத்தின் பாதுகாவலனாக திகழும் நீண்ட வரலாறு இந்தியாவிற்கு உண்டு. கூட்டு சேரா நாடுகளின் தலைவன் என்ற முறையில் உலக அமைதியை மேம்படுத்துவதில் மிகப்பெரும் பங்காற்றியுள்ளது. இப்படி இருக்கையில், இந்திய நாட்டின் குடியரசு தினவிழா கொண்டாட்டத்தில் அமெரிக்க அதிபர் முக்கிய விருந்தினராக கலந்துக் கொண்டது, இந்தியர்களாகிய நமக்கு பெருமை தரும் விஷயமே அல்ல.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்.**